பதிவு எண் — M.5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, தை; 25—1—52. தளிர்-17

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## பசும்புல்

கண்ணுக்கு எட்டிய தூரம் விரிந்து பரந்த பசும் புற்றரையும், வானம் தொட உயர்ந்த பசிய மலைச்சாரலும், அதனைச் சார்ந்து திகழும் பசுங்காடுகளும் நம் உள்ளத்துக்கு அளிக்கும் மகிழ்ச்சியை அளவிட முடியுமா? செய்மைக் கண் நின்று காணும் போதும், பசுமை நிறம் மக்களுக்கு அளிக்கும் இன்பம் போல வேறு எந் நிறமும் அளிப்பதில்லை.

கோடையில் மழை ஒருங்கே பொய்த்து விடுமாயின் நாடு முற்றும் பசுமையை இழந்து விடுகின்றது. மரங்கள் இலைகள் உதிர்ந்து உலவைகளாக மாறுகின்றன. நிலமெங்கும் வறண்ட நிலையில் உள்ளது. புல்பூண்டுகள் யாவும் கரிந்து போய் நிலப்பரப்பு யாண்டும் வெளேரென பாலையாக மாறி உள்ளம் அருவருக்கத் தக்க காட்சியை நிலம் அடைகின்றது வெளியிற் காணும் வெப்பமும் வறட்சியும் மக்கள் உள்ளத்திலும் இடம் பெறுகின்றது. பசும்புல்லின் தலைகூட யாண்டும் காணற்கின்றி ஆடு மாடுகள் வருந்தி அலைகின்றன.

புதுப்பெயல் பொழியத் தொடங்குகிறது. ஆ! அஃதாற்றும் வியத்தகு செயலை என்னென்பது! மழைத்துளி வீழ வீழ வறட்சி முற்றும் மாய்ந் தொழிகின்றது. பசுமை, நிலமெங்கும் ஆட்சி புரியத் தொடங்குகிறது. பசும்புல், அழகு மகள் வீற்றிருக்கப் பாய் விரித்தாற்போல் யாண்டும் காட்சியளிக்கின்றது. காடு மலை முற்றும் ஓரே பசுமை! பசும்புற் காட்சி, புல்லுணுங் கொள்ளும் ஆடு மாடு முதலான உயிரினங்களுக்கு மகிழ்ச்சி யூட்டுகின்றது. வயிறு நிரம்பப் புல்லுண்டு, நீருண்டு மகிழ்ந்து திரிகின்றன. இவ்வாறு பசும் புல்லின் தலை காணற்கும் மழைதான் முதற்காரணம் என்பதனை இச் செய்யுள் விளக்குகின்றது.

---

விசும்பின் துளிவீழின் அல்லால்
மற் றாங்கே
பசும்புல் தலைகாண்(பு) அரிது.

விசும்பின் துளி வீழின் அல்லால்—மேகத்தின் துளி வீழிற் காண்பதல்லது; மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பு அரிது—வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையும் காண்டல் அரிது.

விசும்பு—வானம்; மேகத்துக்கு ஆகுபெயராக வந்தது. 'பசும் புல்லின் தலையும் காண்டல் அரிது' என்பதில் உள்ள இழிவு சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. 'காண்பு' தொழிற் பெயர். மற்று, வினைமாற்றின் கண் வந்தது.

மழை இல்லாவிடின் ஓரறிவுயிராயுள்ள புல்லும் நிலத்தில் முளையாதெனச் சொல்லுவதால் அப் புல்லினை உணவாகக் கொண்டு பிழைக்கும் அஃறிணையாகிய மிருகங்களையும் பசி வருத்துமென்றும், அவை உயிர் வாழ்தற்கும் மழையே முதற் காரணமென்றும் இதனால் பெறப் படுகின்றது.

---

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—
குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| இலை | கர, தை, | தளிர் |
|---|---|---|
| 4 | 25-1-52 வெள்ளி | 17 |

# தேர்தல் - - முடிகின்றது?

இந்தியா என்றும் கண்டிராத, பேரளவில் வாக்காளர்களை உடைய, தேர்தல் பெரும்பாலும் முடிந்து விட்டது.

அதன் முடிவுகள் எல்லோரும் எதிர் பார்த்தபடி பல இடங்களில் கட்சி வகையில் காங்கிரசுக்கே பெருவாரியான இடங்கள் கிடைத்திருப்பதாகக் காட்டினாலும், அது மொத்த இடங்களில் பாதிக்கும் கீழேயே இருக்கிறது.

பொறுப்புள்ள, மிகப்பழைய, அதிதீவிரமும் மிகப் பிற்போக்கும் அற்ற, நல்ல அமைப்பாகிய காங்கிரசு இனியேனும் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டு, இடைக் காலக் கறைகளையும் துடைத்துக் கொள்ள நேருவின் தலைமையில் முயலும் என எதிர்பார்க்கலாம்.

இனி அமையவிருக்கும் அரசாங்கம் எப்படியிருக்கும் என்று திட்டமாகச் சொல்வதற்கில்லை; என்றாலும் அதன் செயல்கள் தீவிரமாக இருந்தாலொழிய, அவற்றிற்கு எதிர்ப்பு மிகுதியாக இருக்கும் என்று தோற்றுகிறது.

நமது நாட்டின் நிலை அதிதீவிர நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே இயல்பான முறைகளிலேயே முற்போக்கில் அரசாங்கம் நடைபெற வேண்டும். நாட்டின் அமைதி காத்தற்கு அதுவே சிறந்த வழி. உணவு, உடை, உறையுள் முதலிய நிலைகளிலேயே பெரிதும் கருத்திருத்திக் கட்சிக் காழ்ப்புகளை விட்டு, வெற்றி பெற்றவர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு அரசாங்கத்தை நடத்தவேண்டும்.

தேர்வினால் ஏற்பட்ட பல நன்மை தீமைகளில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவை சில.

அங்கங்கும் பலர் போட்டியிட்டுச் சுற்றுப் பேச்சுகள் (பிரசாரம்) நடத்தியதால் மக்களிற் பெரும்பாலோர் அரசியல் உணர்வும் விழிப்பும் பெற்றிருக்கின்றனர். தேர்தல் முடிவுகளும், கலந்து கொண்ட வாக்காளர் எண்ணிக்கையும் இதைக் காட்டுகின்றன.

நூற்றுக்கு 10-15 பேர் கூடப் படிக்காத நாட்டில் நூற்றுக்கு 50 பேராவது வாக்கைப் பதிவு செய்வார்களா? என்று அச்சப் பட்ட நிலையில் அங்கங்கே 70-80 பங்கு வாக்காளர்கள் கூடக் கலந்து கொண்டது மகிழ்ச்சிக் குரியதே.

ஒரே இடத்துக்குப் பலர் போட்டியிட்டுத் தொகை தொகையாக ஈடு பணத்தையும் இழந்து தோற்றவர்கள் நிலை மிகவும் இரங்கத் தக்கதாக இருக்கிறது.

தோற்றவர்கள் வெற்றி பெற்றவர்கள் மீது 'காழ்ப்பு'க் கொண்டு குறை கூறுகிற நோக்கத்தோடு இல்லாமல் அவர்களுக்கு நயமான முறைகளில் தக்க கருத்துக்களைக் கொடுத்து நாட்டுக்கு நன்மை விளைக்க வேண்டும்.

அவ்வாறே வெற்றி பெற்றவர்களும் மற்றவர்களை மதித்துத் தழுவி அவர்கள் கருத்துக்களையும் கேட்டுத் தம் தொண்டுகளைச் செய்ய வேண்டும்.

சிற்றூர்ப் பக்கங்களில் போட்டியிட்டுக் கொண்டவர்கள் சார்பாக நிலையான பிளவுகளும் கட்சிகளும் ஏற்பட்டு விடுவது வழக்கம். அதற்கு எவரும் ஊக்கங் கொடுக்கக் கூடாது. அதனால் அவர்களுக்கும் ஊருக்கும் அழிவு நேருமே தவிர ஆக்கம் நேராது என்பதை நன்றாக மனத்துட் கொண்டு அவரவரும் நன்மைகளில் கருத்திருத்த வேண்டும்.

சென்றவைகளை மறந்து சிறந்தவைகளில் நாட்டம் கொண்டு முன்னேற முயல்வதே நல்லது.

"இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின், தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும்."

—வள்ளுவர் அருள் மொழி.

———

# திருக்கழுக்குன்றத் திருப்பணி

[இராயபுரம் இறைபணிக்கழகத்தினரின் முயற்சி]

இந்நிலவுலகத்தில் தமிழ் நாட்டில் மட்டும் தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சான்றோர்களும், சித்தர்களும் அடியார்களும், ஞானிகளும் அவ்வப்போது தொகை தொகையாகத் தோன்றிப் பொதுவாக உலகியலையும் சிறப்பாக அருளியலையும் விளக்கியிருக்கிறார்கள். தென்றமிழ் நாட்டில்தான் அருளியற் சாதனங்களில் முதன்மையான திருக்கோயில்கள் ஆயிரக் கணக்கில் இன்றும் இருக்கின்றன. அருந்தமிழ் மொழியில் தான் அருளியலை விளக்கும் பொருள் (சாத்திர) நூல்களும், புகழ் (தோத்திர) நூல்களும் திறமான உலகியலை விளக்கும் மிகப் பழைய ஒப்பற்ற இலக்கண இலக்கியங்களும் மிகுதியாக இருக்கின்றன. சரியான வரலாறும் போற்றுதலும் இல்லாத நிலையிலும் விளங்கியிருப்பவை இவை. என்னே தமிழகத்தின் மாட்சியும் தமிழர்களின் இன்றைய இழி நிலையும்!

இனி, அருளியல் தக்கோர்களில் ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும், திருக்கோயில்களில் அவர்கள் பாடல் பெற்றவைகளுக்கும், திரு நூல்களில் அவர்கள் பாடியுள்ள தேவார திருவாசக முதலிய திருமுறைகளுக்கும், சிவஞான போத முதலிய மெய்கண்ட நூல்களுக்கும் திரு நாலாயிரத்துக்குமே மிகுந்த சிறப்பு.

சிவ சமயத் திருக்கோயில்களில் நால்வர் பாடலும் பெற்றவை மிகச் சிலவே ஆகும்; அவற்றுக்குள்ள சிறப்பு பின்னும் மிகுதியாம். சென்னைக்கு அணித்தாகத் தொண்டை நாட்டின் கண் திகழும் திருக்கழுக்குன்றம் மலைக்கோயிலாய் அத்தகைய மாட்சியைப் பெற்றுப் பல சிறப்புடன் மிளர்கின்றது. அதன் பெருமைகள் அளவிடற்பாலனவாக இல்லை.

சமய குரவருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் பெருந்துறையில் பெற்ற திருவடிகளை (குருமுகமாகப் பெற்ற ஞானத்தைப்) பல திருப்பதிகளுக்கும் சென்று (பெருக்கிய பின்) தாம் வீடு பேறெய்து முன் உலகவர்க்குப் பயன்படும்படி வைத்த இடம், ஞானபீடம்–வேதமலை, திருக்கழுக்குன்றம்.

அது இறைவன் திருவடிப் புணை கொண்டு பிறவிப் பெருங் கடலை நீந்திக் கரையேறுதற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்; அருட்கோலக் காட்சி தந்து ஆளுடைய அடிகளை வேறு நாட்டமின்றித் தில்லைக்குச் சென்று திருவருளிற் கலக்குமாறு செய்தது.

பிறவியின் முடிந்த பயனாகிய ஞானத்தால் வீடு என்னும் நிலையைத் தந்த அத்திருப்பதியினைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களில் அடிகளார் தம் அருள் வாழ்க்கையின் நுகர்வு (அநுபவம்) களை எல்லாம் படி முறையில் இனிது விளக்குகிறார்கள். அருள நெறிபற்றி இக்காலத்து எழும் பல்வகைக் கேள்விகளுக்குரிய விடைகளும் அப்பாடற் பகுதிகளில் புதைந்து கிடக்கின்றன!

வாதவூரடிகள் அங்கே திருவடிகளை வைத்தார் என்பது, இத்தகைய ஞானக் கருத்துக்களை அத்திருப்பதியின் பாடல்களில் செறித்து வைத்திருப்பதை எண்ணியே ஆகும். இம்மை நலங்களுக்கும், அம்மைப் பேற்றிற்கும் உரிய நல்வழியை அப்பாடல்கள் காட்டுகின்றன.

எனவே அத்திருப்பதியின் பெருமையும், திருப்பதிகத்தின் விளக்கமும் உலகவர்க்கு எடுத்துக் காட்டப் பெற்றால், மறை பொருளாக உள்ள நுட்பமான கருத்துக்களெல்லாம் அம்மலை போல் விளக்கம் பெற்றால், இன்றுள்ள வாழ்வியற் குழப்பங்கள் எல்லாம், அம்மலையின் சாரலில் தங்குபவர்களின் பித்தம் தெளிவது போலத் தெளியும் என்பது உறுதி. இங்கே திருக்கழுக்குன்றத் திருப்பணி என்றது உலகோர்க்கு இத்தகைய ஞானம் வழங்குதலையே ஆகும்.

இவ்வாண்டு மார்கழி மாதம் மணிவாசகர் திருநாட்களை ஒட்டி மேற் குறிப்பிட்ட அருளியல் தெளிவை, ஞானத்தேறலை, ஆசிரியர் இளவழகனார் அவர்களைக் கொண்டு அன்பர்கட்கு வழங்க முற்பட்டனர் இராயபுரம் இறைபணிக்கழகத்தினர். 3-1-52 முதல் 10-1-52 வரை (6-1-52 நீங்கலாக) எழு நாட்களும் மாலை நேரங்களில் முறையாக நாளுக்கொரு பாடல் விகிதம் நடைபெற்றது திருக்கழுக்குன்றத் திருப்பதிகத்தின் விளக்க விரிவுரை.

அவ்விரிவுரையின் சிறப்பை என்னென்று விவரிப்பது! கருத் தொன்றிக் கேட்ட அன்பர் கட்கே அது தெரியும். சுருங் கச் சொன்னால், திருக்கழுக்குன் றத்தில் வைக்கப்பெற்ற திருவடி ஞானம் அவ்விரிவுரை வாயிலாக இராயபுரத்தில் இனிது வழங்கப் பெற்றது எனலாம். கேட்ட வர்கள் பேறு பெரிது என்பதில் தடையில்லை. ஆகவே திருக் கழுக்குன்றத் திருப்பணி அங்கே சிறப்பாக நடைபெற்றது என் றால் அது மிகையாகாது.

அடைவு (அநுபவ)க் குறைவி னாலும் வசதிக்குறைவுகளினாலும் அக்கழகத்தார் அவ்விரிவுரை யைத் தக்கபடி அமைத்து விரி வான முறைகளில் பலர்க்கும் பயன்பட நடத்த முடியாமற் போயிற்று.

மாறுபட்ட கொள்கையுடை யாரும் கேட்டு மகிழ்ந்து திருந் தம் பெறக்கூடிய அவ்விரிவுரை யைத் தக்கபடி நடத்துவதற்கு அது நடைபெற்ற திருக்கோயி லின் அறக்காப்பாளர்களும், அவ்வூர்ப் பெருமக்களும் செல் வர்களும் மேலும் பல உதவி களைச் செய்திருப்பின் நன்றா யிருந்திருக்கும்.

கழகத்தாரும் உதவ வேண் டியவர்களையும், உதவக் கூடியவர் களையும், நிலைமைகளை அவ்வப் போது நயமான முறைகளில் எடுத்துக் காட்டி மேலும் நெருக் கமாகத் தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

அரசியல் கூட்டங்களும், வேறு பல கிளர்ச்சிகளும் மிகுந்து மக்களை ஈர்த்துவரும் இக்கால நிலைக் கேற்பத் திரு வருட் சார்பான ஞான நிகழ்ச்சி களும் விரிவாகவும், நிகழ்த்து வார்க்கு ஏற்ற ஆதரவான நன் முறைகளிலும் நடைபெற வேண் டும். அப்போதுதான் அவை அடுத்தடுத்து நடைபெற்று நன்கு பரவிப்பயன் செய்யும்.

ஞானம் வழங்குதலாகிய திருக்கழுக்குன்றத் திருப்பணி யினை அத்திருப்பதியின் பாடல் களைக் கொண்டே செய்த ஆசிரி யர் அவர்கட்கும், செய்வித்த கழகத்தார்க்கும், கலந்து கொண்ட திருநெறியன்பர்களின் வணக்கமும் நன்றியும் என்றும் உரியதாகும். அப்பதிகத்திற் குரிய விளக்கம் நூலாகிப் பரவும் படி செய்வது மற்றவர்களுக்கும் நன்மை செய்யும்.

தேர்தல் முழக்கங்களும் வேறு பல வாழ்க்கைச் சிக்கல்களும் சூழல்களும் நெருக்கிக் கொண்டி ருக்கும் இந்நாட்களில் மிகத் துணிவோடு தம் பெயருக் கேற்ப இத்தகைய ஓர் அரும் பணியை மேற் கொண்டு இறை பணி நின்ற கழகத்தாரை எவ்வ ளவு வேண்டுமானாலும் பாராட் டலாம்.

அடுத்த திங்களில் நடைபெற விருக்குந் தம் கழக ஆண்டு விழாவின் போது அருட்பாடல் களுக்குக் காலத்துக்கேற்ற முறையில் அரிய விளக்கங்களைக் கொடுத்து வரும் ஆசிரியர் அவர் களைப் பாராட்டி வணங்க அக் கழகத்தினர் திட்டமிட்டிருப்பதா கத் தெரிகிறது. திருநெறி யன்பர்களும் திருக்கோயிலார் களும், செல்வர்களும் தக்கபடி ஆதரவு செய்வது மிகவும் நல்லது.

கழகத்தார், ஆனி மகந்தோ றும் திருக்கழுக்குன்றம் சென்று வழிபாடும், திருமுறை விழாவும் செய்யும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருடன் இணங்கி அவற்றைச் சிறப்புறச் செய்ய முயல்வார்களாக!

—ஒளியகம்.

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

# சிலப்பதிகாரம்

## 14. வழிச் செலவு

'முத்துசாமி'

நாட்டு வழி :

கண்ணகியின் காற்சிலம்பை முதலாக வைத்து வாணிபம் செய்து முன் போலச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளலாமென்றெண்ணி அன்றிரவே கோவலன் கண்ணகியோடும் மதுரைக்குப் புறப்பட்டனன் என்று கண்டோம்.

கோவலன் புறப்பட்டதைக் கனாத்திற முறைத்த காதையின் இறுதியில் "வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்" என்று கூறியதோடமையாது மீண்டும் நாடு காண் காதையின் தொடக்கத்தில் "ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப" என்று கூறி அவன் மதுரைக்குச் செல்ல நேர்ந்தது ஊழ்வினையின் ஏவலாலேயே என்று நன்ருய் நினைவூட்டுகிருர்.

சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து பாண்டி நாட்டின் தலை நகராகிய மதுரைக்கு முப்பத்தொரு காவதம் என்று, ஒரு காவதங் கடந்து கவுந்தியடிகள் தவப்பள்ளி யருகில் வைத்து, இன்னும் மதுரைக்கு ஆறைங் காவதம் என்று கோவலன் கண்ணகிக்குக் கூறுவதிலிருந்து தெரிகிறது.

புகை வண்டி போன்ற விசையூர்திகள் கண்டு பயணத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளாத காலம் அது. நாடு நகரங்களின் வழியாகவும் செல்லுதல் வேண்டும்; காட்டு வழியாகவும் செல்லுதல் வேண்டும். அவ்வாறு நாடுங் காடும் செல்ல வேண்டிய தனையே கவுந்தியடிகள் "காடிடையிட்ட நாடு நீர் கழிதற்கு" என்ருர். அவ்வித நிலையில் முப்பத்தொரு காவதம் நடந்தே செல்வதென்பது எளிதல்ல. எனினும் ஊழ்வினை துரப்பக் கடந்து செல்வதெனத் துணிந்து புறப்பட்டனன்.

புகார் நகரத்தை விட்டுப் பிறரறியாதவாறு புறப்பட்டு மேற்றிசை நோக்கிச் சென்று கவுந்தியடிகள் தவப் பள்ளியிருக்கும் சோலையை யடைந்தனர்.

செல்வியளாகிய கண்ணகி அவ்வாறு என்றும் நடந்தறியாதவளாதலால் மிக வருந்தினள். வருத்தத்தால் வெகுதூரம் கடந்து விட்டதாகக் கருதித் தன் முதிரா மழலை மொழியால் "மதுரை மூதூர் யாதென வினவினள்"

ஒரு காவதந்தான் கடந்து வருந்தினர். மதுரையை யடைய இன்னும் முப்பது காவதம் கடந்தாக வேண்டும். அதற்குள்ளாகவே 'மதுரை மூதூர் யாதெனக்' கேட்ட அவள் அறியாமை கண்டு நகுதல் செய்து 'இன்னும் ஆறைங்காவதமே; அண்மையில்தான் இருக்கிறது' என்று தேற்றினர்.

கவுந்தியடிகள் சமண சமயத்தைச் சார்ந்த ஒரு பெண்பால் துறவி. சிறந்த தவ ஆற்றலுடையவர். 'சாபானுக்கிரக' சக்தி யுடையவர். அவர் பூம்புகாருக்கு ஒரு காவத தூரத்தில் பள்ளி யமைத்துத் தவம் புரிந்து வந்தார்.

கோவலனும், கண்ணகியும் ஆங்குச் சென்று அவரடி தொழுதனர். கவுந்தியடிகள் உயர் குடிப் பிறப்பும் சிறந்த ஒழுக்கமும் உடைய நீங்கள் தீவினையாளரைப் போல உங்கள் இடத்தை விட்டு நீங்கி வரக் கருதிய காரணம் என்ன? என்று கேட்டனர்.

மாதவியோடு கூடிப் பெருஞ் செல்வத்தைத் தொலைத்ததை நினைந்து வருந்தி நாணமுற்றவனாதலின் அதனைக் கூறவும் வெட்கமுற்று 'கூறுவதற் கொன்றுமில்லை; மதுரை மூதூர் சென்று பெருளீட்டக் கருதிப் புறப்பட்டோம், என்று கூறினன்.

'தென் தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரைக்குச் சென்று ஆங்குள்ள பெரியோர்பால் அறவுரை கேட்டு அருகனை ஏத்தும் எண்ண முடையேன் ஆதலின் நானும் உங்களோடு வருகின்றேன்' என்று கவுந்தியடிகள் கூறக் கோவலன் 'நீங்களே அருள் கூர்ந்து துணை வருவதானால் கண்ணகியின் துயரந் தீர்ந்ததாகவே கருதலாம்,' என்று மகிழ்ந்தனன்.

'மதுரைக்குப் போகும் இந்நெறியில் தீங்கு பயப்பன பல உள. அவற்றைக் கூறுகிறேன் கேள்,' என்று, பின் வருவனவற்றைக் கூறினர். அவை வழி நடையில் தீவினை சாராது செல்லும் வகையை அறிவுறுத்துவன போலவும் சோழ நாட்டின்

வளத்தைக் கூறுவன போலவும் அழகுற விளங்கும்.

“சோலைகளின் வழியே செல்லும் போது கிழங்குகளைத் தோண்டி யெடுத்த குழியிற் சண்பகப் பூக்கள் சிந்திக் குழியிருப்பது தெரியா வண்ணம் மறைத்திருக்கும். அவற்றைக் கவனியாது சென்றால் துன்பம் நேரும். அக் குழியினை விட்டுச் செல்லும் போது பலாப் பழங்கள் பகைபோலாகித் தலையில் மோதினாலும் மோதும். குளங்களில் நீர்நாய் கௌவிய வாளை மலங்கு மீன்கள் குறுக்காகப் பாயும் போது இவள் கலங்கினாலும் கலங்குவள். கரும்பின் கண் வைத்த தேன் கூட்டிலிருந்து ஒழுகிய தேன் பொய்கைகளின் தூய நீரில் கலந்து விடும். தணியா வேட்கை மீதுற்றபோது இவள் அறியாது அந்நீரைப் பருகி விடுதலுங் கூடும். வயல்களில் களை பறிப்பார் பறித்துப் போகட்ட குவளைப் பூவிடையே வண்டுகள் உள்ளொடுங்கிக் கிடக்கும். வழி நடந்த சோர்வில் அறியாது அதன் மேல் அடியிடுதலுங் கூடும். வழியில் நண்டும் நந்தும் கண்டு ஒதுங்கி நடவாமல் அவைகளுக்கு ஏதேனுந் துன்பம் நேரிடின் அதன் விளைவாய் வருந் துன்பம் பொறுக்க முடியாதது. சோழநாடு முழுவதும் வயலும் சோலைகளும் தவிரச் செல்வதற்கு வழியில்லை. ஆதலால் நான் கூறிய இடங்களை நெருங்காது செல்க.” இவ்வாறு கவுந்தியடிகள் கூறினர்.

தமது அறநூலில் தேனுண்டலும் கடியப்பட்ட தாதலின் தேன் கலந்த நீரையும் பருகாது செல்க வென்றார். மறந்தும் கொலை செய்தல் கூடாதாதலால் வண்டு, நந்து, நண்டு முதலியவைகளுக்கு நடக்கும்போது ஊறுண்டாகாதவாறு விலகிச் செல்க வென்றார்.

நம் பாதத்தின் அடிப்பாகம் ஏனைய விலங்குகளுக்கு இருப்பது போலல்லாமல் இயல்பாகவே மெத்தென்றிருக்கிறது. ஆகவே பெரும்பாலும் சிறு பூச்சி புழுக்கள் நம் பாதத்திற் பட்டாலும் பிழைத்துக்கொள்ளும்- ஆனால் கடினமான காலணி யணிந்தும் தேய்த்துத் தேய்த்து நடந்தும் செல்லும் பழக்கமுடையவர்களால் எத்தனை யுயிர்கள் அன்றாடம் மாய்கின்றன! இதனை யார் எண்ணிப் பார்க்கிறார்கள். சமணர்களும் ஜைனர்களும் கொல்லாமை நோன்பை மிகத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள். நடக்கும் போது மயிற் பீலி கொண்டு விலக்கிக் கொண்டு நடப்பர். மறந்தும் பிற உயிர்களுக்கு ஊறுஇழைக்காதவர்கள் அவர்கள். அரசன் செல்வாக்கின் துணை கொண்டு அப்பரடிகளைப் பலவகையாகத் துன்புறுத்தினரே யெனின், அவர்கள் தம் கொள்கையில் வழுவினோர் என்று கொள்ளுதல் வேண்டும். நடக்கும் போது நாமறியாமல் நம் பாதத்திற் பட்டுச் சிறுபூச்சி புழுக்கள் மாயா வண்ணம் நடக்கவேண்டுவது தீவினையை மிகுத்துக்கொள்ள விரும்பாதார் கடைப்பிடிக்கவேண்டிய முக்கியமான வழி. அறியாது நிகழும் கொலைக்கே இங்ஙனம் விழிப்பா யிருக்க வேண்டியது இன்றியமையாத தாயின் உணவிற்காக வேண்டுமென்றே கொலை செய்வாரை என்னென்று கூறுவது!

நம்மிற் சிலர் சிறு பூச்சி புழுக்களையும் எறும்பையும் காலால் தேய்த்துக் கொல்வர். சிறுவர்க்கு அது ஒரு விளையாட்டு! தும்பியின் வாலில் நூலைக் கட்டி அது பறக்க முடியாது இடர்ப்படுவதைக் கண்டு இன்புறும் சிறாரும் உண்டு! தேய்த்தலை அரக்குதல் என்ற சொல்லாலும் சொல்லலாம். ஆகவே தேய்ப்பவர் அரக்கர் எனப்படுவர். தேய்த்துக் கொன்று அரக்கர் எனவோ பெயரெடுப்பது?

கவுந்தியடிகள் கூறிய மேற்போந்த பகுதியால் சோழநாட்டு வளம் விளங்குவதும் காண்க.

அவர்கள் நடந்து செல்கையில் வயல்களில் வேலை செய்யும் கடைசியர் பாடல்கள் இன்பம் விளைத்தன. போகுமிடங்களில் மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை மாடங்களை மறைத்து மேகஞ் சூழ்ந்த மலையைப் போலக் காட்சியளித்தன. அவ்விதம் வளமும் வழிபாடுங் கொண்ட நீர் நாட்டின் வழியே வழிநடக்கும் அவலந்தோன்றாமல் நாளொன்றுக்குக் காவத தூரமாய்ச் சென்றனர்.

அவ்வாறு சென்று காவிரியின் ஆற்றிடைக் குறையில் உள்ள சீரங்கம் சென்றடைந்தனர். அங்கே பட்டினப் பாக்கத்திலுள்ள இலங் கொளிச் சிலாதலத்தமர்ந்து அறவுரை கூறும் காரணரைக் கண்டு அடிதொழு

Telegrams: “RAMBROS”
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

தனர். அச் சாரணர் கவுந்தியடிகளை நோக்கிச் சில அறவுரைகள் கூறினர்.

"கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்
ஒழிசென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தி னெதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை யொழிக்கவு மொண்ணா
சடுங்கால் நெடுவெளி யிருஞ்சுடரென்ன
ஒருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்
.......................விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரென"

"மிக்க பெருஞ்சிறப்பினையுடைய கவுந்தி, வல்வினை ஒழிகென வொழியாது; தன் தீவினைப்பயனை நுகர்வித்தே தீரும். நல்வினையும் விதைத்த வித்துப் பின்னர் பயன் தருவதுபோல நற்பயனை யூட்டியே தீரும். பெருவெளியில் பெருங்காற்றிடை யகப்பட்ட விளக்குப் போல உடம்பிடை யுயிர்கள் நிலையாக நில்லா. ஆகலால் ஆகமத்தின்கண் விளங்கும் ஒளியாகிய அருளைச் சார்ந்தல்லது பிறவியிருளினின்றும் வெளிவர இயலாது."

ஊழ்வினை எப்படியும் தன் பயனை நுகர்வித்தே தீரும் என்பதை ஆசிரியர் பலவிடத்துங் கூறிச் செல்வார்; சாரணர் வாக்கானுங் கூறினர். எவ்வாற்றானும் ஊழ்வினையினின்றுந் தப்ப இயலாது. திருவள்ளுவரும் உலைவின்றித் தாழாது உஞற்றுபவரும் ஊழை உப்பக்கங் காண்பர் என்றனரேயன்றி விட்டுநீங்குவர் என்று கூறவில்லை.

அங்ஙனம் அறவுரை கேட்ட கவுந்தியடிகள் கைதலை மேற்கொண்டு 'என் செவிகள் அருகதேவன் அறவுரைக்கன்றிப் பிறிதொன்றற்குத் திறவா; என் நா அவன்நாமமல்லது வேறொன்றனையும் பயிலாது; என் கண்கள் அவன் திருவடிகளையன்றி வேறொன்றனைக் காணா; என் உடல் அவனையல்லது வேறொருவரை நிலமுறப் பொருந்தி வணங்காது; என்கரங்கள் அவனுக்கல்லது பிறிதொன்றற்குக் குவியா; என் தலையுச்சி அவன் திருவடியிணையே தாங்கப் பெறும்; என் மனம் அவனருளின ஆகமத்தினின்றும் புடைபெயராது' என்று தன் நிலைத்த உறுதிப்பாட்டினைத் தெரிவித்தனர். அச் சாரணர் 'பவந்தரு பாசங் கெடுக' என வாழ்த்திச் சென்றனர்.

பின்னர் மூவரும் ஓடத்திலேறிக் காவிரியின் தென்கரையை யடைந்து ஒரு சோலையில் தங்கினர். அப்பொழுது அவ்வழிச் சென்ற பரத்தை யொருத்தியும் அவள் காதலனும் 'காமனும் தேவியும் போன்ற இவர்கள் யாரெனக்' கவுந்தியடிகளைக் கேட்க "என் மக்கள் காணீர், மானுட யாக்கையர்" என்றனர். அங்ஙனங் கூறக்கேட்டவர் தம் வழியே செல்லாது நாவடக்கமில்லாது 'ஒருதாய் வயிற்றிற் பிறந்தோர் கணவனும் மனைவியுமாதலுண்டோ?' என்று கூறி இகழ அதனைக் கேள்வியுற்ற கண்ணகி காதினைப் பொத்திக் கொண்டு கணவன் முன் ஒடுங்கி நிற்க, அதற்கு ஆற்றாராய் அடிகள் அவ் வம்பமாக்களை முள்ளுடைக்காட்டில் முதுநரியாகச் சபித்தனர். கோவலன் அவர்கள்பால் இரங்கி அடிகளைச் சாபவிடை கூற வேண்ட "பன்னிரு திங்கள் படர்நோய் உழந்தபின் முன்னை யுருவம் பெறுக" என அருளினர். பிறகு மூவரும் கோழியூர் எனப்படும் உறையூரை யடைந்தனர்.

---

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

## எங்கள் கால - - - - ஆந்தையார்!

சங்க காலத்தில் ஆந்தையார் என்று ஒரு புலவர் இருந்தார். பிசிர் என்ற ஊரினர் ஆதலின் அவரைப் பிசிராந்தையார் என்பர். ஆண்டில் மூத்தும் அவர் தோற்றத்தில் இளைஞர் போல நரையில்லாமல் இருந்தாராம். அதற்கு அவருக்கு எத்துணையோ வசதிகள்; மனமொத்த மனைவி, அறிவுள்ள மக்கள், எண்ணியதையே எண்ணும் இளைஞர், நல்லதே செய்யும் (வேந்து) அரசு, நல்லோர்களே இருக்கும் ஊர் எல்லாம் அவருக்கு இருந்தன. இத்தனை நன்மைகளுக்கிடையில் நல்ல வளமான நாட்டில் முதியோராகிய அவர் தோற்றத்தில் இளைஞராயிருந்ததில் என்ன வியப்பு! அவரைப் பெற்றிருந்த அந்தக் காலத்துக்குத்தான் என்ன சிறப்பு!

இன்றோ, மக்கள் வாழ்க்கை நடத்துவதே கடினமாக இருக்கிறது; எங்கும் பற்றாக்குறை; வறுமை. மேல் சொன்ன நலங்களில் இரண்டொன்றில் அவரவர் சூழலுக்குத் தகச்சிறிது நல்வாய்ப்புக்கு இடம் இருக்குமே தவிரப் பெரும்பாலான நன்மைகளுக்கு நேர் மாறான நிலையே இன்று உள்ளது. இந்நிலையிலும் ஒருவர் (சராசரி ஆண்டு 23 என்கிற போது) 60 ஆண்டளவும் பல இன்னல்கட்கிடையில் வாழ்ந்து, பல்வகைத் தொண்டுகளையும் போராட்ட நிலையில் செய்து கொண்டு வந்தும் (மயிர் நரைத்தாலும், தொண்டார்வம்) நரைக்காமல் இருக்கிறார் என்றால், அவருக்கும் அவர் இருக்கும் காலத்துக்கும் அவரோடு பழகும் அன்பர்கட்குந் தானே சிறப்பு! ஆகவே இத்தகைய ஒருவரை ஆந்தையார் (இரவில் பெரும்பாலும் தூங்காமல் வேலை செய்வதாலும் இப் பெயர் பொருந்து) என்று சொல்வதிலும் முன்னைய ஆந்தையாரை விட இந்த ஆந்தையாரே சிறந்தவர் என்பதிலும் என்ன தவறு இருக்கிறது!

தமிழ் நன்றாக அரசு வீற்றிருந்த காலத்தில் புலவராக இருந்து அதை வளர்த்த அவரை விடத், தமிழுக்காக, அதன் இழிநிலையை எண்ணி அரசாங்கத்தோடு போர் தொடுத்துக் கொண்டு பல்லாயிரம் மாணவர்களிடையில் தமிழுணர்ச்சியைத் தம் தொழிலாலும் (ஆசிரியராக இருந்தும்) தொண்டாலும் (மாணவர் மன்றத்தின் வழியும்) எழுப்பும் இக்காலத்துப் புலவர்தானே ஏற்றம் உடையவர்.

முன்னவர் தோற்றத்தால் இளைஞர் போலக் காணப்பட்டார் என்றுதான் புறநானூற்றுப் பாடல் சொல்லுகிறது. அவர் தொண்டும் பிறவும் (தமிழுக்கு அன்று தொண்டு செய்ய வேண்டிய தேவையேயில்லை) பற்றி ஒன்றும் தெரியவில்லை.

இப்போதுள்ளவரோ தோற்றத்தால் முதியராய்த் தோன்றினாலும், தொண்டால் இளைஞராகவே இருக்கிறார்; இளைஞர்களிடையிலேயே அவர்களும் வியக்கும்படி தொண்டு செய்கிறார். உணர்ச்சியில், சொல்லில், செயலில் எல்லாம் இளைஞராகிக் கொண்டே வருகிற இவர், பெயரிலும் இளைஞராக ஆய்விட்டார். போகப் போக உடம்பிலும் (உள்ளம் போல) இளமை கொண்டு விடுவார் என்றே தோற்றுகிறது! என்னே வியப்பு! இவரை அறியாத தமிழரும் உண்டா? அறியாதார் தமிழரும் ஆவரா? இவர்தான் புலவர். மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியாராய் இருந்து அறுபதாம ஆண்டில் 'சிவமுத்து' ஆனவர்; அண்மையில் மணிவிழாக் கொண்டவர். வாழ்க இளைஞர் சிவமுத்து! வாழ்க இந்நாள் ஆந்தையார்!! வெல்க அன்னார் தொண்டுகள்!!!

—ஆடலரசு.

---

## 'முல்லைக் கொடி' நேயர்க்கு

**5-10-51-**லிருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்து வருகிறது.

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)